Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 177

திங்கட்கிழமை 22 மே 2023

வைகாசி 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# இனப்படுகொலை நடந்தது உண்மையே கனேடியப் பிரதமரின் அறிக்கை சரியானது



## அலி சப்ரியின் நிராகரிப்பு பெறுமதியற்றது:

### இப்போதாவது விசாரணை நடத்தட்டும் என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், மே 22

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. உண்மையை அம்பலப் படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ளமையைக் கண்டிக்கின்றோம். அலி சப்ரியின் பதிலை நாம் உதா சீனம் செய்கின்றோம் – இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

»11



## ராஜீவ் காந்தியை கொன்ற பயங்கரவாதிகளே அழிப்பாம்

### திடீரென இந்தியாவுக்காக தாளம் போடும் அலி சப்ரி

கொழும்பு, மே 22

32 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்த பயங்கரவாத அமைப்பையே 14 வருடங்களுக்கு முன்னர் அழித்தொழித்தோம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

»10

யாழ். பல்கலைப் பொருள் கையாடல்:

## கிணறு வெட்ட கிளம்பியது பூதம்!

20 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மாயம்?

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியின் களஞ்சியத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பொருள்கள் கையாடல்

»11

## இலங்கையில் நடந்தது இனப்படுகொலையல்ல!

### கனேடியப் பிரதமரின் கூற்றை அடியோடு நிராகரிக்கிறார் மஹிந்த

யாழ்ப்பாணம், மே 22

போரில் துரதிர்ஷ்டவசமாக பொதுமக்கள் சாவடைந்தனர். அதற்காக இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது - இவ்வாறு இறுதிப்போரின்

»10

## இலங்கையில் போர் இன்னும் தொடர்கிறது

### பாதுகாப்பு அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 22

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் மட்டுமே முடிந்தது. ஏனைய போர்கள் தொடர்வதாகவே தோன்றுகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது ஆலோசகர்களு

»11

## தனியார் வகுப்புகளுக்கு ஞாயிறுதோறும் விடுமுறை

### முப்பெரும் தமிழ் விழாவில் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 22

ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான முயற்சியை மேற்

»10

யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்கு

## காத்திருப்புப் பட்டியலில் தெரிவான மாணவர்களை உடன் அனுமதிக்குக!

### மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணிப்பு

யாழ்ப்பாணம், மே 22

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்குக் காத்திருப் புப் பட்டியலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உடனடியாக அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

»11




## மருத்துவர் சிவரூபனுக்கு மீண்டும் நியமனம் வழங்குக!

பளையில் மக்கள் நேற்றுப் போராட்டம்

விரிவு:- பக் - 04 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மதவாத இடையூறு என பிம்பம் ஏற்படுத்தப்படுகிறது

## அதை உடனே கலைக்கவேண்டும் ஜனாதிபதிக்கு அஸ்கிரிய பீடம் கடிதம்

**கொழும்பு, மே 22**

**இனவாத மற்றும் மதவாத பிரச்சினைகள் ஏற்படுவது போன்றதான பிம்பம் நாட்டில் ஏற்படுத்தப்படுகின்றது. ஆதலால், அவ்வாறான நடவடிக்கைகளை இல்லாது செய்து இந்த பிம்பத்தைக் கலைக்கவேண்டுமென்று ஜனாதிபதியிடம் அஸ்கிரிய பீடம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் அஸ்கிரிய மகா விகாரையின் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் உள்ள தாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகள் மற்றும் நாட ளாவிய ரீதியில் உள்ள விசேட பௌத்த தொல்பொருள் தலங் களின் புனரமைப்புப் பணிகளை உறுதிப்படுத்தவேண்டும். தொல்பொருள் தலங்கள் சம்பந்த மான திட்டங்களை அவ்வாறே தொடர்ந்து முன்கொண்டு செல்ல வேண்டும். வெளித்தரப்புகளி லிருந்து பெற்றுக்கொள்ளப்படும் உதவிகளை அதற்காகப் பயன் படுத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும்.

அத்துடன் இனவாத மற்றும் மத வாதப் பிரச்சினைகள் ஏற்படுவது போன்றதான பிம்பம் நாட்டில் உரு வாக்கப்படுகின்றது. இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்த விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

## இந்திய கண்சொட்டு மருந்து கறுப்புப் பட்டியலில் சேர்ப்பு!

கொழும்பு, மே 22

கண் சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தப்பட்டு பாதிப்பை ஏற்படுத்திய 'பிரிட்னிசிலோன்' என்ற கண் சொட்டு மருந்தை, கறுப்புப் பட்டியலில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'பிரிட்னிசிலோன்' கண் சொட்டு மருந்து தொடர்பில் பல சிக்கல்களும், பாதிப்புக்களும் நாட்டில் பதிவாகின. அதனால் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் அதனை பயன்படுத்துவதை நிறுத்துமாறு அனைத்து மருத்துவமனைகளுக்கும் சுகாதார அமைச்சு பணித்தது. இலங்கையில் நடத்தப்பட்ட ஆய் வக சோதனையில் இந்த கண்சொட்டு மருந்து மாசுபட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

இந்தநிலையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'பிரிட்னிசிலோன்' கண்சொட்டு மருந்தை கறுப்புப் பட்டியலில் இணைக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கண் சத்திரசிகிச்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மியான்மாரிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து பயன் படுத்தப்படுகிறது என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க தெரிவித் துள்ளார். (ச-இ)

## வீதி விவகாரம்;

## மக்களுடன் போராடியவர்களை மன்றில் முன்னிலையாகப் பணிப்பு

யாழ்ப்பாணம், மே 22

சாவகச்சேரி நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பை வலிதற்றதாக்கும் விதத்திலும் அதற்கு முரணான வகையில் நடந்து கொண்டதாகத் தெரிவித்து சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உப தவி சாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிசோர், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் திலகராணி ஆகியோரை நீதிமன்றில் இன்று முன்னிலையாகுமாறு அறிவித் தல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி தனியாரால் அபகரிக்கப்பட்டதாகச் சொல்லப் படும் தாவளை, இயற்றாலை - ஊரெல்லை வீதியை மீட்டுத் தருமாறு கோரி சாவகச்சேரி பிரதேசசபைக்கு முன்பாக கிராம மக்களோடு இணைந்து மேற்படி மக்கள் பிரதிநிதிகள் போராட்டத் தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தையடுத்து சாவகச்சேரி பிரதேசபை கொடிகாமம் பொலிஸாரோடு இணைந்து பிரதேசசபையில் உள்ள ஆவணங் களின் அடிப்படையில் தனியாரால் அபகரிக்கப்பட்டிருந்தாகச் சொல்லப்படும் வீதியை அளவீடு செய்து எல்லை வேலிகளை அகற்றி பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து விட்டிருந்தனர்.

வீதியை ஆக்கிரமித்தாகச் சொல்லப்படும் தனிநபரால் சாவகச் சேரி நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி நீதிமன் றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை வலிதற்றதாக்கும் விதத்திலும் அதற்கு முரணான வகையிலும் செயற்பட்டதாகத் தெரிவித்தே மன்றில் முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ,125)

## டெங்கு தீவிரம்

## ட்ரோன் பயன்படுத்தி நுளம்புகள் அழிப்பு!

### நேற்றுமுதல் ஆரம்பம்

கொழும்பு, மே 22

நாட்டில் டெங்கு தீவிரமடைந்து வரும் நிலையில் நுளம்புகளை அழிப்பதற்கு புதிய பொறிமுறை ஒன்று நேற்று முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதற்கமைய அணுகமுடியாத இடங்களில் நுளம்பு களை அழிப்பதற்காக ட்ரோன் கருவி களைப் பயன்படுத்தி 'மொஸ்கிட்டோ டன்க்' என்ற இரசாயனத்தைப் பயன் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 35 ஆயி ரத்து 283 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. நாளாந்தம் சுமார் 400 டெங்குநோயாளர்கள் பதிவாகின்றனர். நாடளாவிய ரீதியில் தேசிய டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## அதிகாரப் பகிர்வு தொடர்பில் பொதுஅமைப்புகள் பேச்சு

மன்னார், மே 22

மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் ஐக் கிய இலங்கைக்குள், 'ஒருங்கிணைந்த வடக்கு மற் றும் கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு' என்ற விடயத் தலைப்பில் மக்கள் கலந்துரையாடல் யாழ்ப் பாணம் திருமறைக் கலாமன்ற பொதுமண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சிவில் அமைப்புக் களைச் சார்ந்தோர், பொதுமக்கள், மீனவ சமூ கங்கள், இளையோர் அமைப்புகள், ஊடகவியலா ளர்கள், ஆலய பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ய-60)

## ஆழமான மறுசீரமைப்புத் தேவை; இல்லையேல் பணவீக்கம் எகிறும்

### இலங்கைக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 22

இலங்கை மிகவும் ஆழமான கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு தவறும் பட்சத்தில், எதிர்வரும் காலங் களில் எதிர்பாராத வகையில் மிகவும் உயர்வான பணவீக்க நிலைமை களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற் படும் என்று வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு எச்சரித்துள்ளது.

நீடிக்கப்பட்ட நிதி உதவிச் செயற்றிட் டத்தின் கீழ் 2.9 பில்லியன் டொலர் கடனை இலங்கைக்கு வழங்குவதற்கு சர்வ தேச நாணய நிதியத் தின் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, அந்த நிதியை முழுமையாகப் பெற் றுக்கொள்வதற்குரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்வதில் இலங்கை அரசாங் கம் அவதானம் செலுத்தி வருகிறது. இவ்வாறானதொரு பின்னணியில் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் மீள்செலுத்துகை நெருக்கடிக்கு உரிய வாறு கையாள்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு ஆய்வறிக்கையொன்றை வெளியிட் டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உறுதித்தன்மை குறித்த மதிப்பீட்டின் பிரகாரம், கடந்த 2022ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 சதவீதமாக காணப்பட்ட கடன்களின் அளவு 2028ஆம் ஆண்டில் 101.3 சதவீதத்தால் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவ்வறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று சர்வதேச நாணய நிதி யத்துடனான இணக்கப்பாட்டின் அடிப் படையில் தற்போது இலங்கை 100 கடப் பாடுகளை நிறைவேற்றவேண்டியிருக் கின்றன. இவற்றில் 25 கடப்பாடுகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 10 கடப்பாடுகள் குறித்த தகவல் பகி ரங்கப்படுத்தப்படவில்லை. ஆதலால், இலங்கை மிகவும் ஆழமான கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு தவறும் பட்சத்தில், எதிர்வரும் காலங் களில் எதிர்பாராத வகையில் மிகவும் உயர்வான பணவீக்க நிலைமை களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற் படும் - என்றுள்ளது. (ம)

# சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை நிறுத்தப்படும்!

## சிவாஜிலிங்கம் ஆவேசம்

**கொடிகாமம், மே 22**
**இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்காக, சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை நிறுத்தப்படும். சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகப் போர்க்குற்றவாளிகளை நாங்கள் தண்டித்தே தீருவோம் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சிவாஜி லிங்கம்.**

கொடிகாமத்தில் அண்மையில் இடம்பெற்ற முள்ளிவாய்க் கால் படுகொலை அஞ்சலிப்பு நாளில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததா வது:

இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லப் பட்ட 1948ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் வரலாறுநெடுகி லும்தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டே வந்திருக்கின்றனர். இதன் விளைவாக 1958, 1977, 1983 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் நாட்டில் பெரும் இனக்கலவரங்கள் வெடித்தன. 2006ஆம் ஆண்டு தொடக் கம் 2009ஆம் ஆண்டு வரை யில் வடக்கு - கிழக்கு எங்கும் இனப்படுகொலைகள் கொடு மையாக முன்னெடுக்கப் பட்டன. அவை முள்ளிவாய்க் காலில் முடிந்தன. எனினும், இன்றுவரையில் எமக்கான நீதி கிடைக்கவேயில்லை. இனப்படுகொலைக்கு உள் ளாக்கப்பட்டோருக்கும், காணா மலாக்கப்பட்டோருக்கும் நீதி தேடும் எங்கள் பயணம் ஒரு போதும் ஓய்ந்துவிடாது அது தொடரும். சர்வதேச நீதிமன் றத்தில் இலங்கையை நிறுத்தி எங்கள் இனம் அடைந்த வேத னைக்கு நாங்கள் நீதியைப் பெற்றே தீருவோம். அதே நேரம் தமிழ்த் தலைமைகள் ஓரணியில் நின்று சுதந்திர தமிழீழத்துக்காக பொதுவாக் கெடுப்பைக் கோரவேண்டும் - என்றார். (ம-159)

இலங்கைக்கு கடத்தவிருந்த

## 2,500 கிலோ ஐஸ் இந்தியாவில் மீட்பு

கொழும்பு, மே 22
இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடு களுக்குக் கடத்த முற்பட்டதாகக் கூறப்படும் சுமார் 2 ஆயிரத்து 500 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பாகிஸ்தானியர் ஒருவர் இந்தியா வில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கேரளக் கடற்பரப்பில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் குறித்த பாகிஸ்தானிய பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய போதைப் பொருள் தடுப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து கைப் பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப்பெறு மதி இந்திய மதிப்பில் 12ஆயிரம் கோடி ரூபா என்று கணிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் நீதி மன்ற உத்தரவுக்கமைய தடுப்பில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ச)

## 60 கிலோ கஞ்சா காரைநகரில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 22
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைந்கர் - மருதபுரம் பகுதியில் சுமார் 60 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற் றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள பற்றைப் பகுதியொன் றில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இரண்டு மூடைகளில் அடைத்து வைக்கப்பட்ட 26 பொதிகள் அடங் கிய கஞ்சாவை மீட்டனர்.

சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்பட வில்லை எனவும் மீட்கப்பட்ட பொதிகளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று சட் டநடவடிக்கைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-125)

## ஹெரோய்னுடன் இருவர் ஈச்சமோட்டையில் கைது

யாழ்ப்பாணம், மே 22
யாழ்ப்பாணம்- ஈச்சமோட்டைப் பகுதி யில் 250 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்க மைய மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20 மற்றும் 21 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்க ளுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய மேலதிக விசார ணைகள முன்னெடுக்கப்படுகின்றன என பொலிஸார் தெரிவித்தனர். (ச-23,125)

## 500 கிலோ கடலட்டை இராமேஸ்வரத்தில் மீட்பு

### இலங்கைக்கு கடத்தலா? பொலிஸார் விசாரணை

மன்னார், மே 22
இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் அருகே சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்ட 500 கிலோ பதப்படுத்தப்பட்ட கடலட்டைகளை தமிழக மரைன் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கடலட்டைகள் இந்திய மதிப் பில் சுமார் 2.5 இலட்சம் ரூபா பெறுமதியென தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுக கடற்கரை யருகேயுள்ள பூலித்தேவன் நகரில் சட்டவிரோத மாகக் கடலட்டைகள் பதப்படுத்தப்படுகின்றன என்று பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)




என்னதான் வேசம் போட்டாலும் மழைபெய்ஞ்சு சாயம் கரைஞ்சால் அவையின்ர உண்மை முகம் வெளியால தெரிஞ்சிடும். இப்ப அப்பிடித்தான் கனபேர் 'புலிவேசம்' போட்டுக்கொண்டு சுத்துகினம். ஆனாலும் ஏதோவொரு கட்டத்தில அதுவும் வெளிப்படத்தான் செய்யுது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எண்டது எங்கட தேசத்தின்ர இனியில்லையெண்டளவுக்கு ஒரு துக்கதினம். எங்கட சனத்தை ஆயிரக் கணக்கில சாக்கொண்டு, சொத்தை அழிச்சு, போராட்டத்தை நசுக்கி எங்கட இனத்தையே கரு வறுத்த நாள் அது. அப்பிடிப்பட்ட நாளில எங்கட சனம் தாங்களாத்தான் முள்ளிவாய்க்கால் நினை வேந்தலைச் செய்தவை. பிறகுதான் அதுக்குள்ள அரசியல்வாதியளும் மூக்கை நுழைச்சவை. எண்டாலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வைச்சு ஆரும் அரசியல் செய்யக்கூடாது எண் டதுக்காகத்தான் பொதுக்கட்டமைப்பு ஒண்டு உருவாக்கப்பட்டது. இந்தமுறை அந்தப் பொதுக்கட் டமைப்பும் சரியா நினைவேந்தல் ஒழுங்குகளைச் செய்யேலை எண்ட குற்றச்சாட்டும் இருக்கு. இப்ப சொல்லவந்த விசயம் அதில்லை.

முள்ளிவாய்க்காலுக்கு வழக்கமா போய் அஞ்சலி செலுத்திற ஒரு அரசியல்வாதியும், இந்தமுறைதான் முதல்முறையா முள்ளிவாய்க்காலுக்கும் போன அரசியல்வாதியும் எரியிற நினைவுத்தீபத்துக்கு முன்னால கவலையான முகத்தோடதான் பூவெல் லாம் போட்டு அஞ்சலி செய்தவை. ஆனால் அதுக்குப் பிறகு அவையின்ர முகத்தில இருந்த கவலை எங்க போனதெண்டே தெரியேலை. ஏனெண்டா முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்யிற இடத்துக்குப் போனால், அங்க அஞ்சலிக்குப் பிறகு தான் இன்னும் கவலை கூடும். தங்கட உறவுகளை நினைச்சு அந்தச் சுடுமணலில புரண்டு அழுகிற அம்மாமாரையும், அப்பாமாரையும் பாக்க வயிறு பத்தியெரியும். கல்லைக்கூட கரைய வைக்கும் அவையின்ர கண்ணீர். ஆனால் கல்நெஞ்சுக்கார அரசியல்வாதியளுக்கு இந்தக் கண்ணீர் எல்லாம் சர்வசாதாரணமெண்டு நிரூபிக்கிறமாதிரி இந்த ரண்டு அரசியல்வாதியளும், நினைவேந்தல் நடக்கிற இடத்துக்குப் பக்கத்தில நிண்டு ஒரே சிரிப்பும், கனைப்பும் தான். அவை ரண்டு பேருக் கும் தங்கட கட்சித் தலைமைப்பதவியில ஒரு கண் இருக்கு. அதால ரண்டு பேரும் உள்ளுக்குள்ள கீரியும்பாம்பும், வெளியில மட்டும் பாலும் பட்டும் மாதிரிப் பழகுவினம். அப்பிடிப்பட்டவை சிரிச்சுக் கதைக்கிறதைப் பார்த்து இன்னொரு அரசியல் வாதி இடைக்குள்ள புகுந்து, 'இதில ஒராள் தலை வராகிட்டா இப்பிடி சிரிச்சுக் கதைப்பியளோ?' எண்டு கேக்க, 'ஆர் தலைவரானாலும் மற்ற ஆள் ஒத்துழைக்கும்' எண்டு அதையும் சிரிச்சுக்கொண்டே சொல்லியிருக்கினமாம்.

உங்கட அரசியலைக் கதைக்க வேற இடம் இல் லையோ? முள்ளிவாய்க்கால்தான் கிடைச்சுதோ? காயம் பட்டவனுக்குத்தானே வலி தெரியும். இவை யளை மாதிரி வேசம் போடுறவைக்கு அதெல் லாம் எங்க தெரியப்போகுது. அவைக்குத் தெரிஞ்சதெல்லாம் வாக்கு மட்டும்தானே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் நினைவேந்தியோரை அச்சுறுத்தியோர் கைதாகவேண்டும்

## ராஜித அரசிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 22
கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்திய அராஜகக் கும்பலைக் கைது செய்யவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொரளையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வை குழப்ப முயன்றவர்களை அந்த நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை ஏன் இன்னமும் கைது செய்யவில்லை? இந்தக் கும்பலின் நடவடிக்கை அரசின் ஆதரவுடன் நடைபெற்றதா? இந்த அராஜகத்தைப் புரிந்த குறித்த அமைப்பு மீது அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படியான அத்துமீறல் நடவடிக்கைகளால்தான் நாட்டில் இன்னமும் இனவாதமும் - மதவாதமும் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கின்றன - என்றார். (அ-ஒ,22)

# சாதனையாளர் கௌரவிப்பு

சாவகச்சேரி, மே 22
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் தேசிய விருதுகள் பெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தேசிய நிலை சங்கீதப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட நாதஸ்வரம், தவில், நடனம், மற்றும் ஜனாதிபதி சாரணர் விருது பெற்ற மாணவன் ஆகியோர் மதிப்பளிக்கப் படவுள்ளனர். (ய-9)

# கொழும்பு நினைவேந்தல் தேவையற்றது; போராட்டத்தையும் நியாயப்படுத்தவில்லை

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

ொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தியிருக்க வேண்டியதில்லை. அதற்காக நினைவேந்தலுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தையும் நான் நியாயப்படுத்தவில்லை - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நினைவேந்தலில் அமைதியைக் குலைக்கும் வகையில் எந்த நிகழ்வுகளையும் பகிரங்கமான இடங்களில் நடத்தக்கூடாது. கொழும்பில் அன்று நடந்த நிகழ்வு தேவையற்றது. அதற்காக, அதற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தை நியாயப்படுத்தவில்லை. குழப்பம் ஏற்படும் என்றும் தெரிந்தும் ஒரு நிகழ்வை குறித்த இடத்தில் நாம் நடத்துவோமாயின் அதுவும் தவறானது. எதிர்காலத்தில் இப்படியான நிகழ்வுகளை நடத்துவோர் நன்கு சிந்தித்து செயலாற்றவேண்டும். தமிழ் மக்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளை தத்தமது இடங்களில் அமைதியாக நினைவேந்த முழுச் சுதந்திரம் உண்டு -என்றார். (அ-ஒ.5,22)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 22
சுன்னாகம், மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ய-66)

# வட்டுக்கோட்டையில் நேற்று வயலுக்குள் பாய்ந்த பேருந்து



யாழ்ப்பாணம், மே 22
வட்டுக்கோட்டையில் வயலுக்குள் பாய்ந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் பொது மக்களால் மீட்கப்பட்டது.
வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று மதியம் இந்தச் சம்பவம் நடைபெற்றது.
வீதியால் பயணித்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வயல்வெளிக்குள் பாய்ந்தது. பேருந்து பயணிகள் சேவையில் ஈடுபடாத நிலையில் , அதில் ஒரு சில இ.போ.ச. ஊழியர்கள் மாத்திரம் பயணித்திருந்தனர். தெய்வாதீனமாக விபத்தில் அவர்கள் எவரும் காயமடையவில்லை. (அ-ஒ,125)

# மூத்த ஊடகர் மாணிக்கவாசகத்தின் நூல் வெளியீடு வவுனியாவில்

மூத்த செய்தியாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எழுதிய 'நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்' என்ற நூல் வெளியீடு எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.
வவுனியா வடக்கு வலய ஆசிரிய மத்திய நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை உப பீடாதிபதி ந.பார்த்தீப்பன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். 'ஊடக நோக்கு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், 'அரசியல் நோக்கு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசியர் கே.ரி.கணேசலிங்கம், சமூகநோக்கு என்ற தலைப்பில் ஊடகவியலாளர் அ.நிக்ஸன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.
வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், கவிஞர் லதா கந்தையா, வீரகேசரி நாளிதழ் உதவிச் செய்தி ஆசிரியர் ஆர்.ராம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.
எழுத்தாளர் மேழிக்குமரன் வரவேற்புரை நிகழ்த்த ஓய்வு நிலைக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் அமரர் மாணிக்கவாசகத்தின் மனைவியுமான திருமதி நாகேஸ்வரி மாணிக்கவாசகம் ஏற்புரையையும் நன்றி உரையையும் வழங்குவார். நிகழ்வுக்கு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.
மூத்த செய்தியாளர் மாணிக்கவாசகம் கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி இயற்கை எய்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## மருத்துவர்...

பளை மருத்துவமனை பொறுப்பதிகாரியாக மருத்துவர் சின்னையா சிவரூபனை மீண்டும் நியமிக்குமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
இந்தப் போராட்டம் பளை மருத்துவமனைக்கு முன்பாக நேற்று பி.ப. 2.30 மணிக்கு இடம்பெற்றது. மருத்துவர் சிவரூபனை மீண்டும் கடமையில் அமர்த்துவதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் வலியுறுத்தினர். 'மருத்துவர் கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரை மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாக மீண்டும் நியமிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (அ-ஒ.9,113)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப் பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம் :** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக காரியம் முடியும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயல்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சி [illegible] தருவார். எதிர்பாராத [illegible]கிடைக்கும்.

**துலாம்:** உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோ சனை அவசி யம்.

**விருச்சிகம் :** காரியங்களில் சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். இறை வழிபாட்டில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். நண்பர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இப்படி, அவர்கள் அப்படி!

**10** பில்லியன் தென்னைகளை நடுகை செய்வதற்காக இலங்கையிடம் தொற்று நீக்கிய தென்னந்தும்புகளைக் கோரியிருக்கின்றது சவூதி அரேபியா. சவூதி இதுவரையும் தேங்காய்களையும், இளநீரையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தே வந்தது. எனினும், அந்த நாடு பரீட்சார்த்த தென்னைப் பயிர்ச்செய்கையில் வெற்றி பெற்றிருந்ததையடுத்து, தற்போது தென்னைப் பயிர்ச்செய்கையை பெருமெடுப்பில் மேற்கொள்ளத் திட்டமிட்டு அதற்குரிய செயல்முனைப்பில் முழுவீச்சுடன் களமிறங்கியிருக்கின்றது.

சவூதியின் விவசாயத் திட்டங்கள் மிகமிக ஆச்சரியமானவை. மண் வளமற்ற அந்த நாடு அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்துதான் மண்ணை இறக்குமதி செய்கின்றது. பின்னர் அந்த மண்ணை பிரமாண்டமான தொட்டிகளில் நிரப்பி அதன் பின்னர்தான் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மண்ணின் விளைதிறன் குறைவடைந்ததும், அது மீண்டும் சுழற்சிமுறையில் பதப்படுத்தப்பட்டு உரமேற்றப்படும். பின்னர் மீண்டும் ஒரு விளைச்சலுக்கு அந்த மண் தயாராகும். இவ்வாறான ஆச்சரியமூட்டும் விஞ்ஞான - தொழில்நுட்ப - மனித வலு முயற்சிகளின் அடுத்தகட்ட நகர்வுதான் சவூதி இலங்கையிடம் கோரியிருக்கும் தென்னந்தும்புகள்.

இலங்கை தென்னை வளம் மிகுந்த நாடு. இங்கு வெட்ட வெட்டக் குறையாத தென்னைகள் முன்னொரு காலத்தில் இருந்தன. ஆனால், போர்க்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் இந்தத் தென்னைகளில் பல தலையிழக்கக் காரணமாகின. இதன்பின்னர் இலங்கையின் தெங்கு வளம் அதன் இயல்பான இருப்பை இழக்க நேரிட்டது. எனினும், இந்த நாள் வரையில் இலங்கையின் தெங்கு வளத்தை மேம்படுத்த - பலப்படுத்த எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் எடுத்ததாக இல்லை. கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் வடக்கை மையமாகக் கொண்ட புதியதொரு 'தெங்கு முக்கோண வலயம்' என்றதொரு திட்டத்தைக் கொண்டுவர எத்தனிக்கப்பட்டபோதிலும் இதுவரை அதன் பூர்வாங்க நடவடிக்கைகள் தொடர்பான தெளிவு கூட எவரிடமும் இல்லை. இந்த அசண்டையீனத்தின் விளைவாக இலங்கை கடந்த சில மாதங்களின் முன்னர் இந்தோனேஷியாவில் இருந்து குளிரூட்டப்பட்ட தேங்காய்களை இறக்குமதி செய்தது.

இலங்கையில் நிறைந்திருக்கும் ஒரு வளத்தை காக்கவோ - பெருக்கவோ முடியாமல், பிறிதொரு நாட்டிடமிருந்து அதேபொருளை - உற்பத்தியை இறக்குமதி செய்வதை விடவா ஒரு கையாலாகாத்தனம் இருந்துவிடப் போகின்றது? தற்போது 10 பில்லியன் தென்னைகளை நடுகை செய்வதற்குத் தேவையான தென்னந்தும்புகளை இலங்கையிடம் சவூதி கோரியிருப்பதானது, சவூதியால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வர்த்தக வாய்ப்பல்ல, இதுவொரு சம்மட்டி அறை. எந்த வளமும் அற்ற ஒரு பாலைவன தேசமான என்னால், தென்னை பயிர்ச்செய்கையை பிரமாண்டமாக முன்னெடுக்க முடிகின்றது என்றால், இயல்பாகவே தென்னை வளம் நிரம்பப்பெற்ற நீ இந்தத் துறையில் என்னதான் சாதித்துவிட்டாய்? என்ற கேள்வியைத்தான் சவூதி தற்போது 'சத்தமின்றி' எழுப்பியுள்ளது.

இது இத்துடன் நின்றுவிடப்போகும் கதையுமல்ல. இன்னும் பத்து வருடங்களில் இலங்கை சவூதியிடமிருந்து தேங்காய்களை இறக்குமதி செய்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வாறான இழிநிலை நேர்ந்த பின்னரும், வீரசேகர கொழும்பில் வழக்கமான இனவாதக் கருத்துக்களுடன் கொக்கரித்துக் கொண்டிருப்பார். தொல்பொருள் திணைக்களம் காணி பிடிக்கும் தன் பிரதான வேலையை பெருமெடுப்பில் முன்னெடுத்துக் கொண்டிருக்கும். ஏனெனில், நேர்படச் சிந்திக்கும் திராணி, இலங்கை அரசியல்வாதிகளுக்கோ அல்லது அவர்களின் அடிவருடித்தனமான திணைக்களங்களுக்கோ இருந்ததாகச் சரித்திரமே இல்லையே!

**நாளொரு நல்வார்த்தை**

"உங்கள் கனவு வெற்றியடையாது முட்டாள்தனமானது என்று யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்"

\- ஜாக் மா




# புலம்பெயர் தமிழர்களின் வர்த்தகத்துக்கு ஆதரவு!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, மே 22**

**போரினால் ஏற்பட்ட அச்சநிலை காரணமாக இடம்பெயர்ந்து உலகின் பல பகுதிகளிலும் வாழும் தமிழர்கள், இலங்கையில் வர்த்தகத்தை மேற்கொள்ளவும் முதலீடுகளை முன்னெடுக்கவும் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே இந்த விடயத்தை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்போது ஜனாதிபதியிடம் கருத்துரைத்த ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார,

புலம்பெயர் தமிழர்கள் பலர் இலங்கையில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைக்க விரும்புகின்றனர்.

அது தொடர்பில் எம்முடன் தொடர்புகொண்டு கலந்துரையாடினர். குறிப்பாக, ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாகவுள்ளனர்.

உண்மையில், அவர்கள், நெருக்கடியான இந்த நிலையில் இலங்கைக்கு உதவுவதற்குத் தயாராகவேயுள்ளனர். சம்பிரதாயபூர்வமான தமிழ் அரசியல் கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம்பிக்கை இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை. இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் வளமான மாற்றத்தையே புலம்பெயர் தமிழர்கள் விரும்புகின்றனர்.

வடக்கு - கிழக்கிலுள்ள இளையோரும் அதனையே கோருகின்றனர் என்று தெரிவித்தார்.

இதற்குப் பதில் வழங்கிய ஜனாதிபதி ரணில், புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அழையுங்கள். அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பு களை வழங்குங்கள். அரசியலில் ஈடுபடும்போது, உலக அரசியல்போக்கை போன்று தேசிய அரசியல் நகர்வுகள் குறித்தும் மதிப்பாய்வு செய்யுங்கள். இது அனைவருக்கும் முக்கியமானது - என்றார். (ம)

# சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மைத்திரி

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அவருக்கு ஆதரவளிக்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவே களமிறக்கப்படுவார் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அறிவித்துள்ளார். இதுவரையில் அந்த முடிவில் எந்தமாற்றமும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவரை ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள போதிலும், அவருக்கு ஆதரவளிக்குமாறு இதுவரையில் எம்மிடம் எந்தவொரு கோரிக்கையும் விடுக்கப்படவில்லை - என்றார். (ம)

**நாளை** 23.05.2023 செவ்வாய்க்கிழமை வைகாசி 09

சுபநேரம் : 10.22 - 11.52

ராகுகாலம் : 02.52 - 04.22

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணலகழ்வால் கல்லாறு மக்கள் அந்தரிப்பு!

## பொலிஸார் அசண்டையீனம்

**கிளிநொச்சி, மே 22**

**கிளிநொச்சி- தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப் பகுதியிலுள்ள பல ஏக்கர் வனப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இரவு பகலாக இடம்பெறுகின்றது. இந்தச் சட்டவிரோத செயற்பாட்டைத் தடுக்கவேண்டிய பொலிஸார் கண்டும்காணாதது போலச் செயற்படுகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:- கல்லாற்றுப்பகுதியிலுள்ள பல ஏக்கர் வனப்பகுதியில் பல அடி ஆழத்தில் மணல் தோண்டப்பட்டு அகழப்படுகின்றது. கடலின் நீர்மட்டத்தை விடவும் அதிக ஆழத்தில் மணலகழ்வு இடம்பெறுவதால் சுண்டிக்குளம் கடல் நீர், குடியிருப்புக்குள் புகும் அபாயநிலை உருவாகியுள்ளது.

உழவு இயந்திரங்கள் மற்றும் டிப்பர் வாகனங்கள் இரவு - பகல் பாராது தொடர்ச்சியாக மணலை அகழ்ந்து செல்கின்றன. இதனால் கல்லாற்றுப் பகுதியிலிருந்து சுண்டிக்குளம் வரை செல்லும் பாதை மோசமாகப் பாதிப்படைந்துள்ளதால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சட்டவிரோத மணலகழ்வு தொடர்பில் கனியவளப் பிரிவினரோ அல்லது பொலிஸாரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தநிலை தொடருமாயின் இங்கிருந்து மக்கள் குடிபெயரவேண்டிய நிலைமை உருவாகும். இது தொடர்பில் உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுத்து சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த வேண்டும் - என்றனர். (ச-113)



## கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், மே 22

கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் ஒழுங்குபடுத்தலில் டெங்கு நோய் பரவல் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை பணிப்பாளரின் ஏற்பாட்டில் மருத்துவமனை பகுதிகளை டெங்கு அற்ற சூழலாக மாற்றுவதற்கான துப்புரவு வேலைத் திட்டம் நேற்றுமுன்தினம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு, கிளிநொச்சி மாவட்டச் செயலகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், கரைச்சிப் பிரதேச சபை, சர்வோதயம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளை, பொலிஸ் திணைக்களம், இளைஞர் கழகம், சமூக மட்ட அமைப்புகள், சமூக தொண்டர் அமைப்புகள், கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவ சமூகம், ரோட்டறிக் கழகம் உட்படப் பல்வேறு தரப்பினரும் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்தனர். (ம-ரி,113)



## திருமலையைச் சென்றடைந்த கதிர்காமம் யாத்திரைக் குழு

யாழ்ப்பாணம், மே 22

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் நோக்கி ஆரம்பமாகிய பாதயாத்திரை குழு திருகோணமலையைச் சென்றடைந்துள்ளது.

கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து பாதயாத்திரை ஆரம்பமாகியது.

கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையைச் சென்றடைந்த பாதயாத்திரைக் குழுவினர் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை- மேற்கொண்டு அங்கிருந்து யாத்திரையை தொடர்ந்துள்ளனர். (ச-66)

## பளைப் பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வு

பளை, மே 22

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்தின் ஏற்பாட்டில் பளை நகர்ப்புறப் பகுதியில் உள்ள அரச திணைக்கள அலுவலர்கள் இணைந்து பளைப் பிரதேச மருத்துவமனை தொடக்கம் முல்லையடி வரை டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் கடந்த வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர்.

இதன்போது டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் வீதியோர சிரமதானம் என்பன இடம்பெற்றன.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் பிரதேசசெயலகம், பிரதேசசபை, சுகாதார மருத்து அதிகாரி பணியகம், அஞ்சல் அலுவலகம், பிரதேச மருத்துவமனையின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து செயற்பட்டனர். (ச-9)



## தென்மராட்சியில் டெங்கு தீவிரம்; ஒழிப்புச் சோதனை இன்றுமுதல்

சாவகச்சேரி, மே 22

அண்மையில் பெய்த மழை காரணமாக தென்மராட்சி பிரதேசத்தில் மீளவும் டெங்குத் தாக்கம் தலைதூக்கியுள்ளது.

காய்ச்சல் காரணமாக மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வருகின்ற தென்மராட்சியைச் சேர்ந்த பலருக்கு டெங்குப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. டெங்கு நோயின் தீவிரத்தை தவிர்க்க பொதுமக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் காணப்படும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீரேந்து பொருள்களை அப்புறப்படுத்தி துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேவேளை தென்மராட்சியின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பிரதேசசெயலகம் அறிவித்துள்ளது. (ச-9)

### வவுனியாவில்

## பழுதடைந்த இறைச்சி விற்றவருக்கு மறியல்

வவுனியா, மே 22

வவுனியா நெளுக்குளம் பிரதேசசபையால் குத்தகைக்கு விடப்பட்ட கடையொன்றில் பழுதடைந்த இறைச்சியை விற்பனை செய்த வியாபாரியை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த பகுதியில் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர். இதன்போது குறித்த கடையில் பழுதடைந்த இறைச்சி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து சந்தேகநபருக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்யப்பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபரை முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் பழுதடைந்த இறைச்சியை அழிக்குமாறும் உத்தரவிட்டார். (ச-18,110)

## மெய்வன்மைப் போட்டி இறுதிநாள் நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், மே 22

கிளிநொச்சி தெற்கு வலயத்துக்குட்பட்ட கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான இந்த ஆண்டுக்கான மெய்வன்மை திறனாய்வுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை றொட்றிக்கோ பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன், சிறப்பு விருந்தினராக் கரைச்சிப் பிரதேச செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் சபாலிங்கம் பிலிப் அமலராசா ஆகியோர் கலந்துகொண்டனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் வெற்றிக் கேடயங்கள் விருந்தினர்களால் வழங்கிவைக்கப்பட்டன. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரணி சிட்டிவேரம்

## அருள் மிகு கண்ணகை அம்மன் ஆலயம்

பருத்தித்துறை வீதி - வரணி

பதிவு இல. HA/5/JA/1180

## வருடாந்த அலங்கார உற்சவம் - 2023

*அம்பாள் பக்த அடியார்களே!*

நிகழும் சோபகிருது வருஷம் வைகாசி 22 ஆம் நாள் **(05.06.2023) திங்கட்கிழமை பொங்கல் உற்சவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.**

**பொங்கல் (1 ஆம் திருவிழா)**
**05.06.2023 திங்கட்கிழமை**

**வேட்டைத்திருவிழா**
**12.06.2023 திங்கட்கிழமை**

**தேர்த் திருவிழா**
**17.06.2023 சனிக்கிழமை**

**தீர்த்தத் திருவிழா**
**18.06.2023 ஞாயிற்றுக்கிழமை**

**குறிப்பு:**
உற்சவ காலத்தில் தற்காலிக வியாபார நடவடிக்கை மேற் கொள்ள விரும்புவோர் எதிர்வரும் (30.05.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கருமபீடத்திற்கு சமுகமளிக்கவும்

ஆலய பரிபாலன சபை
பொருளாளர்
076 308 1048

22.05.2023 (cr 39886) (N-1)


# அடுத்த வருடத்தில் ஈ - கடவுச்சீட்டுகள்

கொழும்பு, மே 22

அடுத்த வருடம் முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

ஈ- கடவுச்சீட்டை (இலத்திரனியல் கடவுச்சீட்டு) அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு பல நாடுகள் தங்களின் உதவியை வழங்கவுள்ளன என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆவணங்களைச் சமர்ப்பித்ததன் பின்னர், மூன்று நாள்களுக்குள் கடவுச்சீட்டுகளைப் பொதுமக்கள் தங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ளும் செயற்பாடு ஜூன் மாதம் முதல் ஆரம்பிக்கப் படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தங்கியிருந்து வயோதிபத் தாயை பராமரிக்கக்கூடிய பணிப்பெண் உடனடியாக தேவை.

**075 391 4278**

(as 705)(N-1)


## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 04 . 1954



மறைவு 21 . 05 . 2023

### திருமதி கந்தசாமி வசந்தாதேவி

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

கோண்டாவில் மேற்கை (முத்தட்டுமட லேன்) பிறப்பிடமாகவும், லண்டனை தற்போது வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கந்தசாமி வசந்தாதேவி அவர்கள் நேற்று (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டயானா (மகள்) - 0044 7737 132063**
**நித்தியா (மகள்) - 0044 7957 555 082**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 24938) A-1

## நீங்கா நினைவில் ஐந்து ஆண்டுகள்

கண் மகிழ 30 . 10 . 1985



மண்நெகிழ 18 . 05 . 2018

### அமரர் கோபாலபிள்ளை குகன்

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதி சிறப்புத்தரம்)

**திதி : திருதியை (22.05.2023)**

பத்து மாதங்கள் கருவறையில்
கனவுகள் சுமந்திட
இப்பூமியிலே வந்துதித்த
அழகிய இதயம் ஒன்று
முப்பத்து இரண்டு வருடங்களாய்
அமைதியாய் கனவுகள் சுமந்து
ஆற்றிய பணி போதுமென்றா
கண்ணிமைக்கும் காலைப் பொழுதில்
காலன் உனை சுமந்து சென்றான்

எம் நினைவுகளில் நிகழ்வின்
நிழல்களை சுமந்து ஐந்தாண்டுகள் ஆனதுவோ!
கருவிழிமூடி நீள்துயில் கொண்டவனே!
இப்பூமியிலே உனைத் தேடி
விழிகள் கலங்குகிறது
இம்மண்ணில் மீண்டும் வந்து புன்னகைப்பாயா?

**என்றும் உன் நினைவில் வாடும்..**

**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**(வேலணை மேற்கு-8)**

(CS 24937) 1-6

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 10 . 1948



மறைவு 11 . 06 . 2013

### திருமதி ஸ்ரீ ரஞ்ஜினி செல்வராஜா

(நீதிமன்ற வீதி, மல்லாகம்)

(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

**திதி : திருதியை - 22.05.2023**

ஆண்டுகள் 10 ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
10 ஆண்டுகள் என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டு நீங்காது

*என்றும் உங்கள் நினைவில்*

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் சகோதரர்கள்.**

(CS50438) (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



## திருமதி விஷயகுமாரி ஞானசிறி

**பகுதித்தலைவர் - ஆரம்பக்கல்வி -(SLTS - 1)**

(T.rained primary- B.Ed.J.P)

| | | |
|---|---|---|
| 1. கிளி / செம்பன்குன்று அ.த.க.பாடசாலை | - | 08.06.1988 – 31.12.1989 |
| 2. யா / கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை | - | 01.01.1990 – 31.12.1991 |
| 3. கிளி / செம்பன்குன்று அ.த.க.பாடசாலை | - | 01.01.1992 – 31.12.1995 |
| 4. கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் | - | 01.01.1996 – 31.08.2000 |
| 5. கிளி/ அக்கராயன் அ.த.க.பாடசாலை | - | 01.09.2000 – 31.12.2002 |
| 6. கிளி / பளை மத்திய கல்லூரி | - | 02.01.2003 – 17.01.2013 |
| 7. கிளி / பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் | - | 18.01.2013 – 04.02.2015 |
| 8. கிளி / வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடாசலை | - | 05.02.2015 – 21.05.2023 |

அர்ப்பணிப்பான கல்விச்சேவையில் 35 வருடங்கள் நிறைவுசெய்து இன்று (22.05.2023) திங்கட்கிழமை ஓய்வுபெறும் எமது ஆசிரியை சகல வளங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
நலன்புரிச் சங்கத்தினர்
கிளி/வேம்பொடுகேணி, சி.சி.த.க.பாடசாலை

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



வவுனியா ஓமந்தை கதிரவேலர் பூவசரன்குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் திருமதி**
## தெய்வநாயகி சிவசுப்பிரமணியம்

தோற்றம்
26.08.1946

மறைவு
28.05.2017

திதி: திருதியை (22.05.2023)

ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்

நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
உங்களின் ஆயுள் கணக்கை
மாற்றி போட்டிருக்கலாம் இறைவன்
மனமிரங்க மறுத்தரோ இறைவனும்

இல்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்

தங்களின் ஆத்மா சாந்தி பெற்று
சிவனடி சேர சிந்தை நிறைய
வேண்டி வணங்குகிறோம் "அம்மா"

*உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

நீங்கா நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

49/92, கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா.
024 222 0418

# ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உப அலுவலகம், உடுவில்.

**வட்டாரம் -3 மானிப்பாய் வீதி, ஆதன இல. 87/9**

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்- 3 மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள 87/9 இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் உரிமை கோருபவர் வை.புவனேந்திரன் எனும் பெயரில் உள்ளது.

மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியான வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறையில் அமைந்துள்ள "நிச்சவேணி" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு. 7 குளி 0.53உம் குழாய்க்கிணறும் ஐயாத்துரை மகாலிங்கம் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் 14778ம் இலக்க 26.10.2020ந் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப் படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் எனது தந்தையாரான செல்லப்பா ஐயாத்துரை என்பவர் 1920ம் ஆண்டிலிருந்து தோட்டம் செய்து ஆட்சி செய்து வந்தார். அதன்பின்னர் 1970ம் ஆண்டிலிருந்து நான் குறித்த ஆதனத்தை தோட்டம் செய்து ஆட்சி செய்து வருகின்றேன் என்றும் குறித்த ஆதனத்தை நான் 50 வருடங்களாக தொடர்ச்சியாக எவரது தலையீடும் இன்றி ஆட்சி செய்து வருவதாகவும் குறித்த வெளிப் படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.பாலேந்திரன் அவர்களால் 13.09.2020 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2020/467 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 7 குளி 0.53ம் அதற்குரியவைகளும் இதற்தெற்கெல்லைகளாக

**கிழக்கு** : நாகேந்திரம் நவதாசன் பெண் தயாழினியின் ஆதனமும்.
**வடக்கு** : நாகேந்திரம் நவதாசன் பெண் தயாழினியின் ஆதனமும்
**தெற்கு** : தோட்டங்களுக்கு செல்லும் பாதையும்
**மேற்கு** : கந்தசாமி சிவாஜியின் ஆதனம்

எனவே மேற்குறித்த ஆதனத்தினை ஐயாத்துரை மகாலிங்கம் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித் துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது ஐயாத்துரை மகாலிங்கம் எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

**திருமதி சாரதா உருத்திரசாம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை,**
**சுன்னாகம்.**
2023.05.12

# ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை உப அலுவலகம், உடுவில்.

**வட்டாரம் - 3 மானிப்பாய் வீதி, ஆதன இல 87/9**

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-3 மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள 87/9 இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் உரிமை கோருபவர் வை.புவனேந்திரன் எனும் பெயரில் உள்ளது.

மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியான வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறையில் அமைந்துள்ள "நிச்சவேணி" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு.8 குளி 9.89, புவனேந்திரன் மகளாகிய நாகேந்திரம் நவதாசன் பெண் தயாழினி என்பவரால் பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் 14777 ஆம் இலக்க 26.10.2020ஆந் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் எனது பேரனாகிய சின்னப்பு வைத்திலிங்கம் என்பவருக்கு சொந்தமாயிருந்து 1920ம் ஆண்டிலிருந்து குறித்த ஆதனத்தை தோட்டம் செய்து ஆட்சி செய்து வந்தார். அதன் பின்னர் எனது தந்தையான வைத்திலிங்கம் புவனேந்திரன் 1955ம் ஆண்டு தொடக்கம் தோட்டம் செய்து ஆட்சி செய்து வந்தார். அதன் பின்னர் 2000ம் ஆண்டு வாய்மொழியாக குறித்த ஆதனம் எனக்கு நன்கொடையாக எனது தந்தையாரால் வழங்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டிலிருந்து குறித்த ஆதனத்தில் நான் எனது கணவருடன் சேர்ந்து தோட்டம் செய்து ஆட்சி செய்து வருவதாக குறித்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.பாலேந்திரன் அவர்களால் 13.09.2020 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2020/468 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01,02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 8 குளி 9.89உம் அதற்குரியவைகளும் இதற்கு எல்லைகளாக

**கிழக்கு** : வைத்திலிங்கம் பொன்னுத்துரையினதும் ருக்மணியினதும் ஆதனங்களும்,
**வடக்கு** : விஜயகாந்தன் பெண் மாதவி, கந்தையா மற்றும் ஜெயரட்ணம் ரஞ்சினிதேவி ஆகியோரின் ஆதனங்களும்
**தெற்கு** : செல்வநாயகம் தமயந்தியினதும் கந்தசாமி சின்னத்துரையினதும் ஐ.மகாலிங்கத்தினதும் ஆதனங்கள்
**மேற்கு** : ஐயாத்துரை மகாலிங்கத்தினது ஆதனமும் ஒழுங்கை முகப்பும்

எனவே மேற்குறித்த ஆதனத்தினை நாகேந்திரம் நவதாசன் பெண் தயாழினி தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது நாகேந்திரம் நவதாசன் பெண் தயாழினி எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி சாரதா உருத்திரசாம்பவன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை**
**சுன்னாகம்.**
(CS/50477)AH-1
2023.05.12

# பலத்த காற்றுக்கு வடக்கில் வாய்ப்பு

கொழும்பு, மே 22

வடக்கு மாகாணத்தில் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்றும் அவ்வப்போது மழைக்கும் சாத்தியம் உள்ளது என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

சப்ரகமுவ, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்வதற்கும் வாய்ப்புண்டு.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# வருமான வரிச் சர்ச்சையில் சிக்குண்ட போதகர் ஜெரோம்



கொழும்பு, மே 22

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ ஆலயம், வருமான வரிச் சர்ச்சையில் சிக்குண்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

போதகர் ஜெரோம் அரசாங்கத்துக்கு வரிகளை செலுத்தினாரா? என்பதைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், ஜெரோம் பெர்னாண்டோவின் தேவாலய நிர்வாகத்துக்கு எந்த வரிச்சலுகைகளையும் வழங்கவில்லை என உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, பௌத்த ஆலயங்கள் அரசாங்கத்தில் மதவழிபாட்டுத் தலங்கள் எனப் பதிவு செய்யப்பட்டால் வரிவிலக்கு அளிக்கப்படுவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருடம் தேர்தல்

# மீளவும் பதவியில் ரணில்!

## விஜயவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, மே 22

ஜனாதிபதி தேர்தல் அடுத்தவருடம் நடைபெறும். தற்போதைய ஜனாதிபதியை மீண்டும் ஒரு பதவிக் காலத்துக்காக தெரிவு செய்வது அவசியம் - இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றால் தற்போதைய ஜனாதிபதி அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஆட்சி புரிய வேண்டும். பொருளாதார நெருக்கடியொன்று உருவாகும் என ஜனாதிபதி மூன்று வருடங்களுக்கு முன்னரே எதிர்வு கூறினார். கொரோனாப் பெருந்தொற்றுக்கு முன்னரே பொருளாதார நெருக்கடியை எதிர்வு கூறினார்.

அவரால் பொருளாதார நிலையை குறிப்பிடத்தக்க அளவுக்கு உறுதியானதாக மாற்ற முடிந்துள்ளது. கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு மீள்வதற்கு பத்து வருடங்கள் பிடித்தது. ஆனால், இலங்கை குறுகியகாலத்துக்குள் ஸ்திரத்தன் மையை நோக்கி நகர்ந்துள்ளது. அனைத்துக் கட்சிகளும் பேதங்களைக் கைவிட்டு நாட்டின் நன்மைக்காக தேசிய கொள்கைகளை உருவாக்க ஐக்கியப்பட வேண்டும்-என்றார். (எ-இ)

திரிபோஷ உற்பத்திக்கு

# சோளம் இறக்குமதி அரசு வரிச்சலுகை!

கொழும்பு, மே 22

திரிபோஷ உற்பத்திக்கான சோளத்தை இறக்குமதி செய்வதற்கு வரிச்சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. லங்கா திரிபோஷ நிறுவனத்துக்கு இந்த வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி ஒரு கிலோகிராம் சோளத்துக்கு 75 ரூபாவாக இருந்த விசேட வர்த்தக வரியை 25 ரூபாவாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த வரிச் சலுகை கடந்த 18ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், பேரீச்சம்பழம் இறக்குமதிக்கு வழங்கப்பட்டு வந்த வரிச்சலுகையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முருகேசு திருநாவுக்கரசு

மண்ணில் 05.07.1947 விண்ணில் 22.05.2022

பிறந்த இடம் : திக்கம் (அல்வாய்)
வாழ்ந்த இடம் (கரவெட்டி - சுவீடன்)

இதயம் என்னும் கோவிலில் தெய்வமாய்
நிறைந்திட்ட அப்பாவே........!
நம்ப முடியவில்லை ஓராண்டு கடந்ததை மாதங்கள்
- பன்னிரண்டு ஆனாலும்
எங்களால் இன்றுவரை ஜீரணிக்க முடியவில்லை
உங்கள் பேரிழப்பால் எம்மை அணைத்திட
யாருமே இல்லையே அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

(cs 37868) 12.6)

# வவுனியாவில் நுங்குத் திருவிழா



வவுனியா, மே 22

பனை மரத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட நுங்குத் திருவிழா நிகழ்வு வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இளைஞர்கள், பெண்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பனம்பொருள் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், பண்டாரவன்னியன் புத்தகசாலையின் புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றது. சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் இந்த விழா முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-110)

# குருதிக்கொடை

யாழ், மே 22

தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாமொன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி செயலகத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வமுடையவர்கள் இந்தக் குரு திக்கொடை முகாமில் கலந்து கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ய-66)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 03 . 04 . 1954 — மறைவு 21 . 05 . 2023

## கந்தசாமி வசந்தாதேவி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவஞானம் குடும்பம்
(கோண்டாவில்)

(CS 24939) A-1

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 26.12.1942 — இறப்பு 19.05.2023

எமது பாடசாலை ஆசிரியர்
திரு.ஞா.செல்வநாயகம்
அவர்களின் பாசமிகு மாமியார்

## கோபாலபிள்ளை பரமேஸ்வரி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்,
கைதடி.

# மரண அறிவித்தல்



## இராஜரட்ணம் நாகபூசணி

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் லோட்டஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் நாகபூசணி நேற்று (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசர், சின்னப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தங்கமயில் ஆகியோரின் சகோதரியும், குணலக்ஷ்மி, இரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பழனிநாதன், பிறேம்குமார் ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவராஜ், வைஸ்ணவி, கபிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலனசபை (2023) தெரிவிற்கான பொதுக் கூட்டம் அறிவித்தல் - 04.06.2023

மேற்படி ஆலயத்தின் 2022 - 2023 நிதி ஆண்டின் பரிபாலன சபை தெரிவிற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 04.06.2023 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது.

அங்கத்தவர்கள் 2022 - 2023 நிதி ஆண்டுக்கான அங்கத்துவத்தை 02.06.2023 இற்கு முன் புதுப்பிப்பதுடன், மேற்படி பொதுக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

21.05.2023

C.M.வரதராசா
செயலாளர்
பரிபாலன சபை.

(CS 24936) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சி பிக் பாஷ் லீக் (ரி.பி.பி.எல்.)

# பரபரப்புக்குக் குறைவில்லாத இரண்டாம் நாள் ஆட்டங்கள்!

யாழ்ப்பாணம், மே 22

உதயன் ஊடக அனுசரணையுடன் பிரமாண்டமாக நடத்தப்படும் ரிபிபிஎல் (T.B.B.L Thenmaradchi Big Bash League) தொடரின் இரண்டாம் நாள் ஆட்டங்கள் நேற்று வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தத் தொடரில் 10 அணிகள் பங்குபற்றுகின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சாவா ஸ்பாட்டன் அணியும், நுணாவில் றொக்கர்ஸ் அணியும் மோதின. அதில் நுணாவில் றொக்கர்ஸ் அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்பாட்டன் அணி 9.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் தனுஸ்ராஜ் மற்றும் ரினோ ஆகியோர் தலா 16 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். நுணாவில் றொக்கர்ஸ் அணி சார்பில் பந்துவீச்சில் மதுராஜ் மற்றும் கௌசிகன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மலவன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் றொக்கர்ஸ் அணி 4.2 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு விக்கெட்டை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நுணாவில் றொக்கர்ஸ் அணி சார்பாக பார்த்தீபன் 28 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

நேற்று நடந்த மற்றொரு ஆட்டத்தில் சாவா மாஸ்டர்ஸ் அணியும், சாவா ஸ்ரைக்கர்ஸ் அணியும் மோதின. அதில் சாவா ஸ்ராக்கர்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக கோபிகன் 49 ஓட்டங்களையும், லக்ஸ்சுதன் 15 ஓட்டங்களையும், தர்சன் 8 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ஜெனிபன் 2 விக்கெட்டுக்களையும், கஜீபன் மற்றும் அனோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி 9.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி சார்பாக சதா ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும், ஜெனிபன் 25 ஓட்டங்களையும், அனோ 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் சாவா ஸ்பாட்டன் அணியும், கைதடி சுப்பர் அணியும் மோதின. அதில் சாவா ஸ்பாட்டன் அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்பாட்டன் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் மைத்ரி ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும், தனுஸ்ராஜ் 47 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். கைதடி சுப்பர் அணி சார்பில் பந்துவீச்சில் கஜன் 2 விக்கெட்டுக்களையும், கவின்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி சுப்பர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களை மட்டுமே பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அந்த அணி சார்பாக கஜன் 42 ஓட்டங்களையும், நிரன்ஜீவ் 18 ஓட்டங்களையும், ஜதீசன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். சாவா ஸ்பாட்டன் அணி சார்பாகப் பந்துவீச்சில் தர்சன், சஞ்சி, பிரவீன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் நுணாவில் றொக்கர்ஸ் அணியும், சாவா மாஸ்டர்ஸ் அணியும் மோதிக்கொண்டன. அதில் நுணாவில் றொக்கர்ஸ் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் றொக்கர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக மலவன் 36 ஓட்டங்களையும், கிருபாகரன் 28 ஓட்டங்களையும், ரைசன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். சாவா மாஸ்டர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் தாரகன் 2 விக்கெட்டுக்களையும், ரஜிதாஸ் மற்றும் லக்ஸ்சுதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களை மட்டுமே பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சாவா மாஸ்டர்ஸ் அணி சார்பாக தர்சன் 75 ஓட்டங்களையும், தசீந்தன் 27 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். நுணாவில் றொக்கர்ஸ் அணி சார்பில் பந்துவீச்சில் கௌசிகன் 3 விக்கெட்டுக்களையும், கிருபாகரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், சாவா ஸ்ரைக்கர்ஸ் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் அருண் 47 ஓட்டங்களையும், சஜீபன் 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் ஜெனிபன் மற்றும் லது ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், கஜீபன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களை மட்டுமே பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக லது 21 ஓட்டங்களையும், தனுசன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ரூபன் 3 விக்கெட்டுக்களையும், அருண் 2 விக்கெட்டுக்களையும், நிலக்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் நுணாவில் றொக்கர்ஸ் அணியும், கைதடி சுப்பர் அணியும் மோதின. அதில் கைதடி சுப்பர் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் றொக்கர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக கிருபாகரன் 56 ஓட்டங்களையும், மலவன் 37 ஓட்டங்களையும் பெற்றனர். கைதடி சுப்பர் அணி சார்பில் பந்துவீச்சில் ரூபன் 2 விக்கெட்டுக்களையும், தயாளன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி சுப்பர் அணி 9 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் நதீ 34 ஓட்டங்களையும், சுஜீவன் 29 ஓட்டங்களையும், கௌசி 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். நுணாவில் றொக்கர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் கிருபாகரன் 3 விக்கெட்டுக்களையும், மலவன் மற்றும் மதுராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், சாவா மாஸ்டர்ஸ் அணியும் மோதின. அதில் சாவா மாஸ்டர்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சஜீபன் 18 ஓட்டங்களையும், கவிராஜ் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். சாவா மாஸ்டர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் பிரதீபன், கோபிகன், தாரகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர் அணி 9.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக தசீந்தன் 33 ஓட்டங்களையும், கோபிகன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் அருண் மற்றும் நிலக்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (எ)

## இலங்கையில்...

போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'மே 18ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது' என்று அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'கனேடியப் பிரதமரின் அறிக்கை தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள கருத்தை முழு மனதுடன் வரவேற்கின்றோம். உண்மை நிலைமை அறியாது சர்வதேசத் தலைவர்கள் கண்டபடி அறிக்கைகளை வெளியிடக்கூடாது. இலங்கையில் போர் நடந்தது உண்மை. அதில் விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் உயிரிழந்தது உண்மை. மக்களும் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்ததும் உண்மை. அதற்காக இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. கனேடியப் பிரதமரின் கூற்றை அடியோடு மறுக்கின்றோம்' - என்றார். (அ-ஓ,5,22)

## தனியார்...

கொள்ளவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பெட்டகம் நிழலுருக் கலைக்கூடம் அமைப்பின் ஏற்பாட்டில் உலக பண்



பாட்டுத் தினத்தை முன்னிட்டு முப்பெருந்தமிழ்விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் தற்போது கைத்தொலைபேசிக்குள் மூழ்கி இருக்கிறார்கள். அதிலிருந்து மாணவர்களை விடுபடவ்வக்க கலைச் செயற்பாடுகளுக்குள் ஈடுபடுத்தவேண்டும். வாரத்தில் ஒரு நாளாவது மாணவர்களை கலைச் செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்க வேண்டும். வாரத்தில் ஒருநாள் குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதே என்னுடைய அடுத்த முயற்சி - என்றார். (அ-ஓ,125)

## ராஜீவ்...

ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட தினமான நேற்றைய தினத்தை நினைவுகூரும் விதத்தில் அலிசப்ரி தனது ருவிற்றர் பக்கத்தில் இந்த விடயத்தை பதிவிட்டுள்ளார். இலங்கை சார்பில் கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாக, ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட நினைவுநாளுக்கு எந்தவொரு இரங்கல்களும் தெரிவிக்கப்படாத நிலையில் இம்முறை திடீரென வெளிவிவகார அமைச்சர் ருவிற்றரில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் உள்ளதாவது:-

32 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளால் இதே நாளில் (மே 21) இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

நிதி திரட்டும் சர்வதேச வலையமைப்பினர் அரசியல் ஆதரவாளர்கள் புலனாய்வாளர்கள் இணைந்து உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் முன்னாள் பிரதமரைக் கொலை செய்தனர்.

அந்தக் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத இயக்கத்தையே 14 வருடங்களுக்கு முன் அழித்தொழித்தோம். இலங்கையில் அமைதியும்- சமதானமும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது- என்றுள்ளது. (அ-ஓ,ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்படுகொலை...

'மே 18ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது என்று அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட அறிக்கைக்கு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கண்டனம் வெளியிட்டதுடன் அதனை நிராகரித்துமிருந்தார். இவை தொடர்பில் இரா.சம்பந்தனிடம், 'உதயன் பத்திரிகை' கேள்வி எழுப்பியது.

அதற்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. அது இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களுக்கும் தெரியும். இலங்கையில் போர் உக்கிரமடைந்த காலத்திலும், போர் முடிவுக்கு வந்த காலத்திலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. அதை மறுக்கும் தற்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அப்போது அமைச்சராக இருக்கவில்லை.

உண்மையை அம்பலப்படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அலி சப்ரியின் பதிலை நாம் உதாசீனம் செய்கின்றோம். அது பெறுமதியற்ற நிராகரிப்பு.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத் தீர்மானங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. பல்வேறு விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை இலங்கை அரசு இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒருபக்கச்சார்பற்றவிசாரணையைச் செய்யவில்லை. வெளிநாட்டு விசாரணைக்கும் இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. உள்நாட்டு விசாரணையையும் நடத்தவில்லை.

ஏன் உள்நாட்டு விசாரணை இல்லை? என்ன காரணத்துக்காக உள்நாட்டு விசாரணை இல்லை? உள்நாட்டில் பக்கச்சார்பற்ற சுயாதீனமான விசாரணையை இலங்கை அரசு இதுவரை நடத்தவேயில்லை. அதிலிருந்து தாங்கள் செய்தது குற்றம்; விசாரணை நடத்தினால் உண்மை வெளிப்படும் என்றும் இலங்கை அரசு அஞ்சுகின்றது என்பது நன்றாகப் புரிகின்றது.

எனவே, அலி சப்ரியின் பெறுமதியற்ற கருத்துத் தொடர்பில் நான் அதிகம் பேச விரும்பவில்லை. அவரின் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை நடந்தது உண்மை. அது தொடர்பான கனேடியப் பிரதமரின் அறிக்கையை வரவேற்கின்றோம். இனியாவது - இப்போதாவது ஒரு பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முடியுமா? என்று இலங்கை அரசிடம் கேட்கின்றோம். இலங்கை அரசுக்குத் துணிவிருந்தால் அதைச் செய்யட்டும் -என்றார். (அ-ஒ.5.22)

## இலங்கையில் போர்...

டனான முறைசாரா உரையாடலின் போது குறிப்பிட்டுள்ளார் என கொழும்பின் ஊடகத்தகவல் தெரிவித்துள்ளது. இந்தக் கலந்துரையாடலின் போது பாதுகாப்பு தரப்பிலுள்ள உயர்மட்ட அதிகாரிகளிடையே ஏற்பட்டுள்ள முறுகல்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் பாதுகாப்புப் படையினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த கடுமையான பாதுகாப்பு வலயம் பற்றிய முறைசாராக் கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட ஆயிரம் உணவுப் பொதிகள் பற்றிய தகவல்கள், கடந்த ஆண்டு ஏற்பட்டதைப் போன்ற ஒரு பெரிய போராட்டத்தின் அச்சத்தைத் தூண்டியதாகப் பாதுகாப்புத் தரப்புக்கள் தெரிவித்திருந்தன. இதனையடுத்தே வன்முறையைச் சமாளிக்க படையினரும் காவல்துறையினரும் தயாராக இருந்தனர். எனினும் எதுவும் இல்லை என்பதால் சுமார் 72 மணி நேரத்துக்குள் பாதுகாப்பு பலப்படுத்தல் படிப்படியாகத் திரும்பப் பெறப்பட்டது.

பாதுகாப்புத்துறையில் இருப்பவர்கள் உணவுக் கொள்வனவு அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்வது அசாதாரணமானது அல்ல. பிரிவினைவாதப் போரின் போதும் வடக்கிலுள்ள வெதுப்பகங்களை உளவுத்துறை அதிகாரிகள் கண்காணித்த வரலாறுகள் உள்ளன. அசாதாரண அளவு பாண்கள் தயாரிக்கப்படும் போது அவர்களின் கவனம் தூண்டப்படும். இதனால், தாக்குதல் நடக்கலாம் என்ற சந்தேகம் படையினர் மத்தியில் இயல்பாகவே ஏற்பட்டு வந்ததாகத் பாதுகாப்புத் தரப்புக்கள் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-ஒ.இ)

## காத்திருப்புப்...

திறமை ஒழுங்கில் வெற்றிடங்களை நிரப்பும் முகமாகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களைப் பதிவு செய்வதற்கு அனுமதிக்காமல் திருப்பி அனுப்பும் அதிகாரம் பீடாதிபதிகளுக்கு இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, வெட்டுப் புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் முதற்பட்டியலின் படி 2021/2022 கல்வி ஆண்டுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டன. எனினும், உயர்தரப் பெறுபேறுகளின் மீளாய்வுக்குப் பின்னர், வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களை வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல் மூலம் அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது. ஆனாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் காணப்படும் வளப்பற்றாக்குறை காரணமாக 2021/2022 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாயினும், வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டியலில் வருகின்ற மாணவர்கள் 2022/2023 கல்வி ஆண்டுப் பிரிவினருடனேயே கல்வி கற்க முடியும் என அவர்கள் அனுமதிக்காகப் பதிவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றதையடுத்தே அனுமதிக்கப்படும் மாணவர்களின் பதிவை நிராகரிக்கும் அதிகாரம் பீடாதிபதிக்கு இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பொறியியல் பீடத்தால் அனுமதிக்கப்படக் கூடிய மாணவர்களின் தொகை என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு உட்பட்டே வெற்றிடங்கள் நிரப்பும் பட்டியலும் தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை அனுமதிப்பதில்லை எனப் பீடம் முடிவெடுக்கமுடியாது. மானியங்கள் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்படும் மாணவர்களை அனுமதித்தே ஆக வேண்டும். அனுமதிக்க முடியாத நிலைமை இருந்தால் பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பீடாதிபதி அது பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்திருக்க வேண்டும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

(அ-ஒ.5)

## கிணறு வெட்ட...

குறித்த விசாரணைகளில் பல திடீர் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. கையாடப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் மூன்றரை இலட்சம் என சம்பந்தப்பட்ட பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அறிக்கையிட்டிருந்தாலும், அது 20 இலட்சங்களைக் கடந்திருக்கலாம் எனப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் சிலர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இதனால் முறையான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக் கையாடல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கெனப் பேரவையால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் இருவர் விசாரணைகளில் பங்குபற்றாமல் வெளியேறியிருப்பதையடுத்து கையாடல் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்குப் புதிதாக இரண்டு உறுப்பினர்களைப் பல்கலைக்கழகப் பேரவை நியமித்துள்ளது. கையாடல் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகுதியுடன் நேரடித் தொடர்பு இல்லாத உறுப்பினர்களைக் கொண்டு பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நேற்றுமுன்தினம் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியின் களஞ்சியத்தில் ரூபா 3 இலட்சத்து 75 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் காணமற்போயுள்ளதாகப் பராமரிப்புப் பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன், அந்த அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் களஞ்சிய சாலைப் பணியாளர்கள் சிலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டும் இருந்தது. சம்பவம் தொடர்பில் அதிகாரிகளின் தவறை மறைப்பதற்காக கீழ்நிலைப் பணியாளர்கள் மீது குற்றஞ்சாட்டப்படுவதாகவும், சம்பவத்துடன் நேரடித் தொடர்பில்லாதவர்களே பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டி வந்தன. இது தொடர்பாகப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கும் தொழிற்சங்கங்கள் தெரியப்படுத்தியிருந்தன.

இதனிடையே, கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி கூடிய பேரவை, பூர்வாங்க விசாரணை அறிக்கையின் அடிப்படையில் களஞ்சியசாலைப் பொறுப்பாளர் ஒருவரை விசாரணைகள் முடிவுறும் வரையில் தற்காலிகமாக இடைநிறுத்தியதுடன், சம்பவம் தொடர்பில் அவருக்குக் குற்றப்பத்திரிகையையும் அனுப்பியிருந்தது. முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கென மூவர் கொண்ட குழுவையும் நியமித்திருந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட களஞ்சியசாலைப் பணியாளர், தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கிறார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளிலும் இவர் தனது பக்கக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். கோப்பாய் பொலிஸார் தனியாக விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

விசாரணைக் குழுவுக்குப் பேரவையால் மார்ச் 25ஆம் திகதி நியமிக்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மே மாதம் 8ஆம் திகதியிடப்பட்டு 10ஆம் திகதி உரியவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. காலந்தாழ்த்திக் கடிதம் அனுப்பப்பட்ட காரணத்தால், தன்னால் விசாரணைகளை மேற்கொள்ளமுடியாத நிலையில் இருப்பதாகவும், மே 12ஆம் திகதி தான் பிரிட்டனுக்குப் பயணப்பட இருப்பதால் விசாரணைக் குழுவில் இருந்து தன்னை விடுவிக்குமாறும் அந்த அதிகாரி பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தார். அதேநேரம் விசாரணைக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் வேறு காரணங்களால் விலகுவதாக அறிவித்தார். இதனையடுத்து கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தலைமையில், இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் ஒருவரையும், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பிரதம கணக்காளரையும் உறுப்பினர்களாகக் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவத்துடன் நேரடியாகச் சம்பந்தப்படாத இருவர் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பராமரிப்புப் பகுதியின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணை வறிதானதாகக் கருதப்படுகிறது. மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள பூர்வாங்க விசாரணைகளின் போதும், அதன் அடிப்படையில் தொடரப்படவுள்ள முறையான விசாரணைகளின் முடிவில் இன்னும் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவரலாம் என்பதோடு இந்தக் கையாடலுடன் தொடர்புடைய முக்கியமான சூத்திரதாரிகள் சிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் 'சோபா' உடன்படிக்கை மேற்கொள்ளும் திட்டமில்லை!

## அமெரிக்கா கூறுகின்றது

கொழும்பு, மே 22
இலங்கையுடன் மீண்டும் 'சோபா' உடன்படிக்கையை முன்னெடுக்கும் திட்டம் எதுவுமில்லை என தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பணியகத்தின் துணை உதவிச் செயலாளர் அப்ரீன் அக்தர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
'சோபா' உடன்படிக்கை தொடர்பாக நாங்கள் தற்போதைக்கு சிந்திக்கவில்லை. அமெரிக்கா, இலங்கையுடன் தொடர்ந்தும் நெருக்கமான விதத்தில் செயற்படுகின்றது. முக்கியமாக கடல்சார் பாதுகாப்பு விவகாரங்களில் மிகவும் நெருக்கமாகச் செயற்படுகின்றது. இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா கடற்படை கலம் ஒன்றை வழங்கியுள்ளது. அமெரிக்காவால் விசேட கடல்ரோந்து விமானமொன்றும் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. அது அடுத்தவருடம் இலங்கை வந்துசேரும். இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இலங்கையை அமெரிக்க வலுவான சகாவாகக் கருதுகின்றது - என்றார். இருநாடுகளுக்கும் இடையில் 'சோபா' உடன்படிக்கையை செய்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் 2019ஆம் ஆண்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. (எ-இ)



# வெடிக்காத விமானக் குண்டு கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, மே 22
500 கிலோகிராம் நிறையுடைய அதிசக்திவாய்ந்த விமானக் குண்டொன்று கிளிநொச்சி, தருமபுரம் - மயில்வாகனம் பகுதியில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.
பிரதேசவாசிகளால் தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து இந்த சக்திவாய்ந்த குண்டு மீட்கப்பட்டுள்ளது. போர்க்காலத்தில் கிபீர் விமானத்தால் வீசப்பட்ட வெடிக்காத குண்டே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் குண்டு 3 அடி நீளமும் 3 அடி சுற்றுவட்டமும் கொண்டதாகக் காணப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# இடைநிலைத் தரங்களுக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு

## கல்வியமைச்சு அறிவிப்பு

தேசிய பாடசாலைகளில் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவது தொடர்பில் கல்வியமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.
அதன்படி தேசிய பாடசாலைகளில் 2 முதல் 4 மற்றும் 7 முதல் 10 வரையிலான இடைநிலை தரங்களுக்கு புதிதாக மாணவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர்.
இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான கடிதங்கள் கல்வி அமைச்சால் தேசிய பாடசாலைகளுக்கு அனுப்பப்படும். விண்ணப்பதாரர்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)

# வசந்த முதலிகேயின் பதவியில் மதுஷான்!

கொழும்பு, மே 22
அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய ஏற்பாட்டாளராக மதுஷான் சந்திரஜித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ராஜரட்டைப் பல்கலைக்கழகத்தில் நடந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடலில் மதுஷான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார பீடத்தைச் சேர்ந்த மாணவர் ஆவார்.
இதற்கு முன்னர் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளராக வசந்த முதலிகே செயலாற்றியிருந்தார். (எ-இ)


**Maths Classes**
A/L - இணைந்த கணிதம்
கணிதம் தரம் 6 - 11 வரை
தனியாக / குழுவாக கற்பிக்கப்படும்.
T.P.: 074 240 4581

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு.
* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

தொடர்பு: **077 638 5683**
**076 755 8606**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு.
* யாழ்ப்பாணத்திலிருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* யாழ். நகரில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* நான்கு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

தொடர்பு: **077 259 0391**
**076 739 0413**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்புக் காணி விற்பனைக்கு.
* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 பாதையுடன்
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்

தொடர்பு: **076 4365 814**
**077 065 4525**

## காணி விற்பனைக்கு

* யாழ்ப்பாணம் கீரிமலையில் 48 பரப்பு (**நிலப்பரப்பு**) காணி விற்பனைக்கு.
* கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* காணியின் வடக்கு எல்லை கடல், தெற்கு எல்லை பிரதான காப்பற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).

தொடர்பு: **076 911 9371**
**077 8748 135**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.